969
D. 892

ஸ்ரீ மீனாக்ஷி துணை.

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

டிராமா

# மார்க்கண்டேயர் சரித்ரம்

## முதற்பாகம்

OFFICE OF THE ... 22 NOV 1927




வித்வான், வேலூர் நாராயணசாமி பிள்ளை

அவர்களால் இயற்றப்பெற்றது.

பிரசுரித்தவர்:—

...ம்பலம்—முனுசாமி நாயுடு,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தூர் ஒரிஜினல் டிரமாடிக் கம்பெனி,
சிலோன்சாயபு பாய்ஸ் கம்பெனி,
மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி,
மதுரை தத்வமீனலோசனி வித்வபாலசபா,
எஸ். ஜி. கிட்டப்பா சுந்தராம்பா பி. வேலுநாயர்
கே. எஸ். முத்துலக்ஷ்மு, ஞானும்பாள் பங்கஜம்,
டி. ராஜாமணிஅம்மாள் தஞ்சைபாலகானசபா,
பயாஸ்கோப் காட்சியிலும் நடத்திய

# மார்க்கண்டேயர்

## (டிராமா.)

முதற் பாகம்.

இஃது,
தமிழ்நாடகத் தலைமையாசிரியர்,
சந்த சாப சுர சங்கீத ஸாஹித்ய வண்ணக்களஞ்சிய,
ஸ்ரீமான் மஹாவித்வான்,

**வேலூர். நாராயணசாமிபிள்ளை**

அவர்களால் இயற்றியது,

**மாம்பலம் முனிசாமிநாயுடு**

அவர்களால்,

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம்பிரஸ்ஸில்
பதிப்பிக்கப் பட்டது.

ரிஜிஸ்டர்ட்காபிரைட்

இதன் விலை] 1927. [அணா 4.

22 NOV ... MA

0-8991MN81,M
N27

உ

சிவமயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்ற யாவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

ஸ்ரீமான். மஹாவித்வான், வேலூர் நாராயணசாமிபிள்ளை யவர்களால் நூதனமாய் இயற்றிய மார்க்கண்டேயர் டிராமாவை சென்னை பெருமாள்கோவில், தோட்டத்தெரு 26-வது நெம்பர் வீட்டில் இருக்கும் மாம்பலம். முனுசாமிநாயுடாகிய நான் ஷை யாரிடம் சுத்தக்கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தி இருப்பதால் ஷை மார்க்கண்டேய டிராமாவை யாதாமொருவர் அச்சிடுவாரேல் 1887ஞுலத்து 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி யான் கோரும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாகவேண்டுமென்பதை கவனிக்கக்கோருகிறேன்.

இப்படிக்கு,

மாம்பலப். முனுசாமி நாயுடு.

28828

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தூர் ஒரிஜினல் டிரமாடிக் கம்பெனி,
சிலோன் சாயபு பாய்ஸ் கம்பெனி,
மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி,
மதுரை தத்வ மீனலோசனி வித்வபால சபா,
எஸ். ஜி. கிட்டப்பா கே. பி. சுந்தராம்பாள்,
கே. எஸ். முத்துலக்ஷுமு ஞானம்மாள் பங்கஜம்
பி. வேலுநாயர் டி. ராஜாமணி அம்மாள் தஞ்சை பாலகானசபா,
உபாத்தியாயர், ஸ்ரீமான் மஹாவித்வான்,

**வேலூர். நாராயணசாமிபிள்ளை,**

அவர்கள் பாடிய,

# மார்க்கண்டேயர்

## (டிராமா.)

முதற்பாகம்.

---

### விநாயகர் காப்பு.

வெண்பா.

பூலோக மெல்லாம் புகழ்மார்க் கண்டேயர்
மேலாம் சரிதை சொல மேதினியில்—வேலோன்
முன் னுதித்த வைங்கரனே மூலாதா ரப்பொருளே
என்னுளுங் காத்தருள்வா யே.

தரு ஸ்ரீராகம் ரூபகம்.

### திரிலோகமும்.

கஜமாமுக காங்கேயசோதரா
கருணாகர
தருணமருளும்

நிஜரூபகணேஸ    பீஜாக்ஷரா
நித்யநிகில    சுத்தவகில
சத்துசித்தா    னந்தகமல    (க)

மூஷிகவாகன    ஸ்வர்ன
மூலாதாரஸாமள    கர்ன
பூஷண லம்போதர    நிதே
பூஜிதநாராயண    சாமி
புண்யபாத    நமோஸ்துதே    (க)

## சரஸ்வதி துதி.

நன்னபியாரி மோரி.

வாணியே    வாக்கருள்வாயே
வேணியே    பாலிப்பாய்நீயே    (வா)
வீணைக்யானி    யம்மணியே
ஆணிமுத்தே    மும்மணியே
பாணிணி வெண்    மணியே
பாரதியே    சாரதாம்பா
பூரணி காரணி    யம்பா    (வா)
நாராயணசாமி    ஸ்தோத்ரி
தாராயருள்    ஞானநேத்ரி
சாரதாம்பா    மோனக்ஷேத்ரி
தாயேயருள்    வாயேபினி
நீயேசேயன்    ஸ்ரீகாத்ரி    (வா)

---

# 1. சீன். ரிஷி ஆஸ்ரமம்

## மிருகண்டேயர்-மருத்வதி துதி.

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழப்பாடியுள்மாணிக்கமே
[illegible] யாரைநினைக்கேனே.

சம்போ சங்கரா !

## தரு ஐயனேமணிவண்ணா.

சம்போ சதாசிவமே தற்பரா மாதவமே (ச)

சங்கரா கங்காதரா சந்த்ரசேகரா சிவமே (ச)

நம்பினேம் பசுபதி நாயகா தயா நிதி
நாதனே வேதனே நாரிபாகா யானேமுன்கதி (ச)

நாராயணசாமி துதி நாரி பங்காளா மதி
ஞானமே! மோனமே நம்பிநின்றேன் காருமித்ததி (ச)

நமப்பார்வதி பதயோகம: ஜே ஜே சங்கர்! கண்ணே மருத்வதி நம் பூர்வ கர்மானுசார வினைபோன்று, நமக்கு புத்ரசந்தான மில்லாததால் நம் மனமாகப்பட்டது எப்போதும் சிந்தைமெலிந்தவண்ண மாகவேயிருக்க நேர்ந்ததல்லவா! இன்னதுதான் செய்யவேண்டுமென்று ரோற்றவில்லை என்னசெய்வது.

மருத்வதி:—பிராணபதி புத் என்னும் நரகத்தை மீட்கவேண்டியமார்க்கம் தேடவேண்டியதுதானே நம் கடமை.

மிரு:—ஆம். என்மனதில் ஒன்று ஏற்பட்டிருக்கிறது அதாவது அபுத்ரனென்னும் வசை நீக்கும் பொருட்டு,

## தரு ஆற்றுமணல்அனல்.

தெய்வலோகம் போய்வாரேனுன்
சிந்தைவாடாதே பெண்ணே
ஐய மின்றி விடைகொடுத்
தனுப்புவாயடி கண்ணே போய்வாரேன் (தெ)
அங்குசென்றூற் சகலபாவம்
அகலுமடி என்மாதே
மங்கையே சந்தோஷமுடன்
வாக்களிப்பாய் பூங்கோதே போய்வாரேன் (தெ)

மாதர்க்கரசி மகிழ்வாய்விடை[illegible]
புத்திரபாக்கிய வரம் [illegible]
நான்போய்வர? காதலி[illegible]

## மருத்வதி தரு.

உம்மைப் பிரிந்திருப்பேனோ.

எப்படிநான் பிரிந் திருப்பேன்-இனி
எவ்விதமா யுயிர் தரிப்பேன்
இப்படி தனியாக எனைவிட்டுப்போகலாமோ
ஒப்பிலாவென் துரையே ஓங்குந்துயரம்போமோ (எ)

நாரும்பூவும்போலே நாமிருந்தோமேசாமி
பாரிலுமைப்பிரிய பதறுதுடலும் காமி (எ)

துரையே நாமிருவரும் இணை பிரியாம லிருந்தோமே இது சமயம் நானெப்படி பிரிந்திருப்பேன் பிராணபதி தனியே யிருப்பே னாயின் சோகம் விளைவிக்குமே இதற்கெப்படி யோசனை பிராணபதி.

மிரு:—என் கண்மணி அந்த தெய்வ லோகத்தின் கண்ணே முப் போது முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம்மஹ ரிஷிகளு மிருப்பார்கள் அத்தகைய மேம்பாடாகிய சுரபதி வாழ்கின்ற ஸ்தலத்திற்கு.

## தர்க்கம்.

தரு. காசிக்குப்போகவே

காதலிநான்சென்றுவாரேன் கலங்காதேஎன பங்கிளியே
மாதவர்கள் யாருமங்கு வந்திருப்பார் மின்னொளியே (கா)

அங்கு அப்பேர்ப்பட்ட மஹான்களைத் தெரிசித்தால் நாம்செய்த கர்மானுசாரம் துலைந்து பரிசுத்தமாய்விடும் கண்ணே?

## மருத்வதி தரு.

முனிவர்தம்மைதெரிசித்தால் முன்வினைபோகுமேதேரும்
தனித்துவிட்டுப்போகலாமோ தளருதேயோசித்துப்பாரும் (மு)

என் பிராணபதி அந்ததெய்வலோகத்தில் வந்திரானின்ற மகரிஷி களைத் தரிசித்தால் நாம்செய்த வினைபோகுமா அதெப்படி போகும்.

## மி[illegible]டேயர் தரு.

[illegible] மல்லலும்வினையும்போமே
[illegible]ாக்கருள்வாய்சுகமேலாமே (அ)

என்கண்ணே அன்னவர்களின் தரிசனார்த்தத்தால் சகல பாவமும் சூரியனைக்கண்ட பனிபோற் றுலைந்தேவிடும்.

### மருத்வதி தரு.

துரையேயிங்கிருந்துசிவத்தை துதிப்போமோபிராணநாதா ;
பிரியமனம்வரவேயில்லை பிரணவமறிந்த வேதா. (மு)

எனது பிராணகாந்தா இங்கனே யிருந்தவாறே அந்த சிவத்தைப் போற்றுவோமாகில் நலந்தருமல்லவா தங்களைப் பிரியமனம் வரவில்லையே

### மிருகண்டேயர் தரு.

(தாரதி லாரா.)

நாயகி சஞ்சலங் கொள்ளாதே
நலமுட னென்மொழி தள்ளாதே (நா)

### மருத்வதி தரு.

நடந்திட மனமது நாயகா வருமோ இனி
நயமுடனே இரும் ஜயமுடனே

### மிருகண்டர் தரு

நலம் தரா திருந் திடில் நாயகியே

### மருத்வதி கஜல்.

நாதாஎனையிப்போது நாட்டாற்றில் விட்டு
ஆதாரமின்றிப்போக லாகாதுவினை தொட்டு
தீதா யேற்படுமோ வென திகைக்கு துளம் கெட்டு
மாதவாபோகாமலிரும் வழுத்தினேன்கும் பிட்டு

### மிருகண்டர் தரு.

மருத்வதி எனைவிட மனமுங் கலங்கிடா தே
மயங்கிடாதே வீணிற் றயங்கிடா தே

### மருத்வதி தரு.

டனமது உருகுது மன்னாஇப்போது (நா)

மிரு:— மாதே! பூர்வகர்மத்தை யொழிக்கப்போகும் சமயம் நீ இப்படி ஒரேபிடிவாதமாயும், ...
குமா, வினைபோகுமா! கவ...

மாக எனக்கு விடைகொடுத்தனுப்பு இனி தடைபுரியாதே பதில் வாக்கை மீறுவது பத்தினிமார்கட் கழகா! யோசித்துப்பார்.

மரு:—சுவாமி தங்க ளிஷ்டப்படியே சென்று விஷயத்தைமுடித்துக்கொண்டு திரும்பி வருவீராக வந்தனம்.

மிரு:—நல்லது கண்ணே மங்களமாக யிரு.

## திருப்புகழ் தரு.

கருவி னுரு வாகி வந்து வயதளவி லே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனுலே
கரிய குழன் மாதர் தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி

அந்தரமாய் தேவகன்னியர் வருதல்.

## தரு. 1-வது தேவகன்னி

ரா ரா ரா ரா பௌன்சியா.

நல்லஸ்தலமே பூலோகம்
ஜில்லென்றிருக்கு திப்பாகம்
மல்லிமுல்லைப நேகம்
எல்லாமுண்டுசாத் விகம்

## தரு. 2-வது தேவகன்னி

வல்லியேநா மிரங்கியே
இல்லிடமின்று தங்கியே
சல்லாபமா யொதுங்கியே
தொல்லைதீர்ப்போ மிங்கையே

## தரு. 1-வது தேவகன்னி

வந்தோம் வந்தோம் பூஞ்சோலை
செந்தேன் கமழு மிச்சாலை
தந்திடு வோமிப் பாலை
கந்தமாங் கற் பகச்சோலை (ந)

ஆ ஹா பேஷ் பூலோகத்திலும் இப்பேர்ப்பட்ட பூஞ்சோலையுமிரு
[illegible] நாமும் சென்று இதைச்சுற்றி இதன்
[illegible] க்கண்டு களிக்கலாம்
[illegible]

2-வதுகன்னி:—ஆம் அப்படியே உட்சென்றுபார்க்கலாம்! அக்கா ரொம்பவும் ஆயாசமாக யிருக்கிறது அதனால் களைப்பு மிகுப்பு மாகிறது; இதற்கெப்படி சமீபமாக யாதொரு ஆஸ்ரமுங் கூட காணோமே என்னசெய்வது.

1-வதுகன்னி:—(சுற்றிலும்பார்த்து) ஆஹா பேஷ்; அதோ ஒரு திவ்ய ஆஸ்ரமம் அந்தப் பூஞ்சோலைக்குநடுவே தெரிகின்றது அங்குசென்று நம் களைப்பைத் தணித்துக்கொள்வோம் வா

2-வது கன்னி:—ஆம் அதுதான் சரி;

மருத்வதி:—நம் பிராணபதி புத்ரவசை நீக்கும்பொருட்டு தெய்வலோகம்போ யிருக்கின்றனர். அங்குசென்று நம் கர்மானுசாரத்தை யொழித்து, புத்ரபாக்யம்அடையத்தக்க மார்க்கம் செய்துகொண்டு வருவார் தடையில்லை! ஆஹா! நம்பூர்வ வினையின் பொருட்டு இப்படியும் மலடாரயிருக்க நேர்ந்த தல்லவா; நல்லது சென்றயிடத்தில் எவ்வாறாகுமோ ஒன்றுந் தோணவில்லையே? தெய்வலோகம் சென்ற பிராணபதி இன்னும் வரவில்லையே! இதனுலாகிறது தொல்லையே! என்ன செய்வது பிராரத்வம் எப்படியோ அறிகிலோம். ஈஸ்வரா! என்பிராணபதிக்கு நல்வரம் தந்தருளவேண்டி நின்றேன் சம்போ சங்கர மஹா தேவா!

தேவகன்னியர் வர.

இவர்கள் யாரோ தெரியவில்லையே! நம்மையே நாடி வருகின்றனர், காரணம்யாதோ! நம் பிராணபதியும் தற்சமய மிங்கில்லையே! என்னசெய்வது இதற்கு, சரி! வரட்டும் கவனிக்கலாம்.

தேவகன்னியர்:—மங்கள முண்டாகுக ஆசிர்வாதம் ஆசிர்வாதம் அம்மா.

மருத்வதி தரு.

(என்பேரைச் சொன்னனென்று)

யாரோ நீங்கள் தானம்மா
போதைக் கூறும் சும்மா
ஊரென்ன சீரு மென்ன
கூறிடப் பாரு

## தேவகன்னியர் தரு.

குமரிகளும் அமருலகம்
எமை ரக்ஷிப்பீர்
எங் திழையே ரிஷி பத்னியே (யா)

மருத்வதி:—மிக்க சந்தோஷம் அம்மா வீற்றிருங்கள். தாங்கள் இங்கு பிராப்தமானதன் பொருட்டு, நான் புனிதளாகினேன் இவ்வாஸ்ரமமும் புனிதமாயது.

1-வதுகன்னி:—அம்மா! தாம் உபசரித்ததே போதுமானது. அதிருக்கட்டும், தங்கள் திருமுகமானது ஒருவாறு பீதியடைதல்போன் றிருக்கின்றதே யாதுகாரணமம்மா.

## தரு காணவேணும்.

ஏனம்மணி இப்படி தயங்குறீர் அதை
ஏதோ ஓதும் மாதேநீர் மயங்காதீர் நீரும்
தானேதிகைக்குங் காரணம்
மானேசொல்வாய் சம்பூரணம்
மாதே இனி மீதே (ஏ)

சந்திர முகமும் வேறுபட்டு வீணில்
தயங்குவ தேனே உம்மதிகெட்டு இனி
சந்தோ ஷமாய் சொல்லும்யாதோ
சுந்தரி விந்தையோ சூதோ
சொல்லும் வினை வெல்லும் (ஏ)

அம்மா! சந்த்ரவதனமாகப்பட்டது வாடிவதங்குங் காரணம் தெரிவியுமே. "அகத்திலழகு முகத்திற் றெரிகிறதே!"

மருத்வதி:—அம்மா எனக்கு எத்தகைய வருத்தமுமில்லை! என் பிராணபதி இன்னும் வராததால் சிந்தித்துக்கொண்டிருங் கிறேன் அதுபற்றி யிப்படி மாறுதலாக யிருக்கலாம் வேறொன்றுமில்லை!

## தேவகன்னியர் தரு

(ஆரே ஸையான்)

தனிமை யாக வாடித்
காரண மேதம்மா (தா)

நீ யேனோ யிப்படி நிலை மாறி
நினைப்பதென்ன மாதே
மனக்லேசம் வையாதே
வாடிடாதே நாடிடாதே
கேட்டாதே ஈடிலாகோதே (தா)

## மருத்வதி தரு.

நாயகர் தேவ ருலகம் போனார்
நங்கையா னதனாலே
நலியுரேனுன் மென்மேலே
நங்கையரே தங்கையரே
மங்கையரே இங்கிருப்பீர்
மாதர்களே யாது வேண்டுமோ கேளும்
ஆதரித் தெங்களை யாளும் (மா)

அதுபற்றியே என் மனம் ஒருவாறாக யிருக்கின்றது, வேறு யாதுமில்லை.

1-வதுகன்னி:—அப்படியா சரி இப்போது விபரம் தெரியவந்தது; அதனால் அத் யானந்தமாகியது.

மருத்வதி:—அம்மா தெய்வ மங்கையரே தாங்கள் ரொம்பவும் களைப்பாக வந்தீர்போலும் தெரிகிறதே.

-25225

2-வதுகன்னி:—அம்மா யாங்கள் தேவலோகத்திலிருந்து வந்ததால் களைப்பு மேலிட்டது, அதனால் சுற்றுமுற்றும் பார்த்தபோது, இவ்வாஸ்ரமம் புலப்பட்டது, ஆனந்தமெய்தி இங்கடைந்தோம்.

## தரு ஐஸோகாலே

பசி யாலே யாமும் வந்தோ மம்மா
பதறுதே நெஞ்சம்

புசிக்கசாதம் தந்தாற் போதும்
புண்யவதியே எம்தாயே
சுசியாய் மோரும்
ருசிக்கத் தாரும்
பசியைத் தீரும்
பாது காரும் (பசி)

இதுசமயம் தாங்கள் எங்களிட ஆயாசத்தை தீர்த்தாற் போதும் தாயே.

மருத்வதி:—சந்தோஷம்! அதற்கென்றே காத்துக்கொண்டிருக்கிறேனே தங்களிஷ்டப்படிக்கே ஆயாசத்தைத்தீர்த்து புனிதமடைவேன் ஆகையால் இனிமீது.

## தரு. நன்னபியாரி.

வாரும் தெய்வ மங்கையரே
நீரு முண்பீர் நங்கையரே (வா)

பாரும் அறுசுவையும்
கூறும் பருப்பு மெவையும்
மோருடன் நெய் யவையும்
சீராகவே பரி மாறுவேன்
நேராகப் பதிற் கூறுவேன் (வா)

மிட்டாய் தினுசு வகையும்
லட்டு பாயாசம் வடையும்
பட்டுசரிகை யுடையும்
பாரும் தாரேன் நேரிழை மாரே (வா)

இப்போதே தங்களுக்கு அறுசுவையுடனும் அமுதளிக்கின்றேன் அமருங்களிப்படி அம்மமாரே.

[illegible]னிபர்:—நல்லது. (உட்கார—வாழை யிலை போட்டு அன்ன [illegible]பி[illegible]ல்.)

[illegible]ம்மா இனி [illegible]கள் ஆனந்தமாக?

மருத்வதி:—ரொம்பவும் சந்தோஷம்! அருந்துவீர்கள் நங்கையரே என்ன யோஜனை !

2-கன்னி:—அம்மா நாங்கள் தனிமையாயுண்ணமாட்டோம்; ஆதலால் தங்கள் புத்திரன் அல்லது புத்திரியையுங்கூடவே உட்காரவைத்து உண்ணவேண்டும்அதற்குதான்யோசனைஎதோ அழையுங்களம்மா! பசி யதிகமாகயிருக்கிறது. அப்பா தாள முடியவில்லையே! சீக்கிரம் வரவழையும் தாயே குழந்தையில்லாது உண்ணமாட்டோம்.

மருத்வதி:—இதற்கென்னசெய்வது குழந்தைகளில்லையே இதற்கெப்படி!தெய்வலோகம்போன பிராணபதியும் வரவில்லையே இவர்களுக்கென்னவென்று பதில்கூறுவது. மனம் பதறுதே! சிதறுதே ! இவர்கட்கு பதிற்கூறகைகால்களுதறுதே நாவெழ வில்லையே ?

### தரு சஹானு ரூபகம்.

இவர்கள்தமக்கு யானு மென்னென்று பதிற்சொல்வேன்
எதுந் தோணவில்லையே இதற்கென் செய்வேனுன் (இ)

கவலை மிகவாகுது கருத்துமதால்நோகுது
சிவமேஇதற் கெப்படி சிதறியுடல் வேகுது (இ)

(வ-ம்) என்ன செய்வேன் பதில்மொழி எவ்வாறியம்புவேன் உண்மைதெரியாவிடில் பேர்கெடுமே இதற்கெப்படி எதுந் தோணவில்லை.

கன்னிகை:—அம்மா எனிப்படி திகைத்தவண்ணமாக யிருக்கின்றீரே! உமது குழந்தை எங்கே.

மருத்வதி:—அதற்காகவே என்பிராணநாயகர் போயிருக்கிறார்.

2-வதுகன்னி:—குழந்தையை அழைத்துவரும்பொருட்டாஎன்ன

மருத்வதி:—அல்ல? புத்திரபாக்கியம் பெறுவதற்கேதான்.

1-வதுகன்னி-:சிவ சிவ இதுவரை ...க்கும் புத்திரபாக்கி...

2-வதுகன்னி:—சிவ சிவ ! ஓ!—அருந்தவாவேண்டும் !

மருத்வதி:—ஆம் தாயே.

1-வதுகன்னி:—புத்திரபாக்கிய மில்லாதோர் வீட்டிலேயா யருந்துவது ! பேஷ் ! நன்குரைத்தனை ஆஹா !

மருத்வதி:—இல்லையேல், அடியாளாகிலும் கூடயிருந்து அருந்துகிறேன்.

கன்னியர்:—சீ சீ அறிவு கெட்டவளே?

## தரு ஜாதிதிமுஸ்பர்க்கு

புத்ரனில்லாத வீட்டினிலே — நாங்களும்
புசித்திட — மாட்டோமடிரிஷி
பத்னியேயின்றுன் — முகத்தில்விழித்தோமே
பாவந்தீர்வ — தெப்படி இப்
பாவந்தீர்வ — தெப்படி எம்
ஜீவம்போகு — மிப்படி (பு)

பாதகிபுத்ர னில்லாப் — பாவி மலடி
வாதிக்கும் நரகமும் — மாதே மலடி
மூதேவி யிப்போது — முன் நின்றதடி இது
முன்னம் செய்திட்ட — வினையே இதனாலே
கன்ம மாச்சு — சனியே (பு)

(வ-ம்.) பரமசண்டாளி மகவில்லா மலடிமுகத்தில் விழித்தோமே பாதகி புத்திரனில்லாத வீட்டில் புசிக்கவுமாகாதே ! அவர்கள்முகத்திலும் விழிக்கப்படாதே! முன்பின் யோசியாமலும் ஆய்ந்தோய்ந்து பாராமலும் வந்தோமே! சற்றும் கவனியாதுற்றோமே! அடிபாவி ! புத்திரனில்லார்க்குச் சொர்க்கமில்லையே! இந்தப் பாவந்தீர புண்ணியநதிகளில் தீர்த்தமாடினாலும் ஒழியாதே ? என்னசெய்வது ! சிவ சிவா சங்கரா கைலைவாசா சிற்சபே[illegible] ஜன்மசாபல்யமாகக் கருணைபுரிய [illegible] கங்காதரா [illegible] ஹரோ ஹரா சம்போ சதாசிவா

கன்னியர்:—சீ சீ மலட்டுப்பிணமே (போய்விடல்)

மருத்வதி:—ஹா சர்வேசா! (மூர்ச்சித்தல்.)

(தேவகன்னியர் போனதும்
மூர்ச்சைதெளிந்து.)

(தரு ஜோதுர்சரோஜ)

போனார்களே கன்னியரும்
போஜனங் கொள்ளாமலே (போ)

வீணேஇச் சென்மமெடுத்தேன்
ஏதும்வகை தோணேன்சிவமே (போ)

புத்ரனில்லா வீட்டில் அன்னம்
புசியேனென்று போனார்பின்னும்
இத்ததி மனங் குன்றினேன்
என்னைக் காரும் ஓ சிவமே (போ)

பிள்ளையுமில்லார்க்கு சொர்க்கம்
இல்லையென்றுசெய்தார் தர்க்கம்
உள்ளத்தி லாச்சேசு லக்கம்
உமாபதி காரும் சிவமே (போ)

(வ-ம்.) சிவ சிவா இப்பேர்ப்பட்ட ஜன்மமும் ஓர் ஜன்மமா! புத்திர சந்தானமில்லாமற் றவிக்கிறேனே இதற்காக அருள்புரியலாகாதோ! சங்கரா சச்சிதானந்த சொரூபா சம்போ எங்கள் மீது மனதிரங்கி சந்தானம் தரலாகாதா! ஹே கைலாச நாதா முற்பிறப்பில் எவ்விததீமை செய்திருந்தாலும் அதை க்ஷமித்து என் குறையை யங்கீகரித்து, கருணைபுரியலாகாதா! தெய்வலோகம் வந்திருக்கும் என் மனோஹர பிராணபதிக்கு புத்திரபாக்கிய மடைய வரமருளவேண்டும் தயாநிதி! ஹே கிருபாநிதி! ஹா! (அழுதல்) ஐயோ தெய்வமே இப்படி தயங்கவும் விடலாகுமா! ஹா.

(குறத்திவருதல்.)

குறத்தி தரு.

சுந்தரமாய் சுகிர்த குறவஞ்சி வந்தேன் (சு)

சந்த்ரகாந்தி ஜொலிக்க
சதங்கைசப்த மொலிக்க
கந்தகளப மலேக்க
காந்தியுமாரை வலிக்க
வந்தேனே நான் (சு)

சொர்ன உடை யணிந்து
பொன்னணிகளேப் புனேந்து
அன்னநடையும் நடந்து
மின்னவிடையா லடர்ந்து
வந்தேனே நான் (சு)

கண்டோர்மனந் திகைக்க
விண்டலந்தா னகைக்க
எண்டிசையும் துதிக்க
அடன்ர்கள்மிக மதிக்க
வந்தேனே நான் (சு)

(வ-ம்.) ஏ ஆயி பச்சலமை குத்தலேயோ பச்சலமைகுத்தோ! ஏ அப்பே பச்சை குத்திக்கிறீங்களா! வாங்களேன்.

## தரு· ஜல்தல்மை.

பச்சலமை குத்தலியோ
பச்சலமை குத்தலியோ
அம்மே -ஏ-அம்மே -ஏ-ஐயே.
கச்சிதமாக நான்
இச்சைபோல் குத்துவேன்
அம்பே- ஏ-ஐயே. (பச்)

பாம்புந் தேளும் பறவைபோல் நான்
லாம்பும் காக்கை பூஜுன் செய்யான்
வேம்பும்யா ளியானே வேங்கைப்பொன்மான்
வேண்டியபடியே குத்துவேனியான் (பச்)

கைகள் பார்த்து குறிகள் சொல்வேன்
கலக்கந்தீர்ப்பேன் களிக்கப்பார்ப்பேன்
நலம்புலம் உண்மையாய் நானுரைப்பேன் (பச்

ஏ அம்மே! ஏ ஆயி! ஏ அப்பே! ஏ ஐயே! கை பார்ப்பேன்! குறி சொல்லி கவலை தீர்ப்பேன், இப்படி யாவரும் வாங்களேன்! அவரவர் மனதில் நினைத்ததை எள்ளுக்காய் பிளந்தாற்போலே உண்மையாய் சொல்லிவிடுவேன் நம்புங்க, ஏன் அங்கேயே நிக்குரீங்க, இப்படி வாங்க ஆயி! ஏ ஐயே! இங்கு வாங்க கேட்டுத் தெரிந்துகொண்டு போங்க! இவர்கட்கு வேண்டியதில்லைபோலும் தெரிகிறது. நல்லது (மருத்வதியைப் பார்த்து) இதோ ஒரு ஆயி ஏதோ கவலையோ டிருக்கிறார்கள், அருகிற் சென்று உண்மையை யறியலாம், அதுதான் சரி! (அருகில் வந்து) ஏ ஆயி! ஏ அம்மே! நான் குறிகள் ரொம்ப ரொம்ப சொல்வேன், நினைந்திருப்பதையும், வரப்போவதையும் அப்படி அப்படியே சொல்லிவிடுவேன், பாரும் ஆயி! நீர் இப்படி உட்கார்ந்து கிலேசமா யிருக்கிறீங்களே! ஏதோ உங்கள் கையை இப்படி காட்டுங்க! நீட்டுங்க! உமது உள்ளக் கருத்தை வெளியிடுகிறேன், கவனியுங்கள் ஆயி! (கவனித்து) ஏ அம்மே!

தரு நாயா ஜோபன வாரிமை

அறிந்து கொண்டேன் குறியை நான்
தெரிந்துகொண்டேன் (அ)

திரிந்து திரிந்து அந்த கெவுளியும் சப்திக்குது
மருதவீரனும் கள்ளு சாராயம் கேட்குது
மன்னார்சாமி காவு கொண்டுவா வென்குது
சின்னான் மாடன் குறளி திரும்பியே பார்க்குது (அ)

மருத்வதி:—(திடுக்கிட்டு) என்ன ஆச்சரியமிது! நம் முகத்தை நோக்கினவுடன் ஏதேதோ சொல்லுகிறாளே! கையைப் பார்ப்பாளேயாகில் யாவத் விஷயங்களையும் கூறிடுவாள்போல் தோன்றுகிறது, அவளிடம் கைகாட்டி உண்மையறிந்துகொள்ளலாம், ஏ பெண்ணே குறத்தி! நீ இருப்பது எந்த நாடு, தெரிவி!

குறத்தி:— ஆயி அப்படியே சொல்லுகிறேன்.

தரு தில்யாரயார

கொச்சிமலை குடகுமலை
கொல்லிமலை என் நாடு (கொ)

பச்சைமலை பவளமலை
பரமன்மலை என் நாடு
அச்சுதன் காக்ஷிதந்த
ஆதிபரஞ் சோதி மலை (கொ)

நான்முகன் சரஸ்வதியும்
நாடிடும் ஸ்படிக மலை
தேன்சொரியுந் தேவேந்திரன்
தேவி இந்திராணி மலை (கொ)

நாரணன் பிரமன் சிவன்
நங்கையுடன் வாழு மலை
பூரணமாய்க் குபேரன்
பொன்னின்மலை வெள்ளி மலை (கொ)

வேதசொ ரூபமான
விளங்கிடும் லக்ஷ்மி மலை
ஆதிபரா பரனும்
அம்பிகையும் வாழு மலை (கொ)

நாராயண சாமி புகழ்
ஞான சொரூப மலை
தீராதகன்மந் தீர்க்கும்
சித்தாதிகள் மோன மலை (கொ)

ஏ ஆயி! இதுதான் என் நாட்டு வளம், மலை வளம் சுருக்கமாகச் சொன்னேன், இன்னும் ரொம்பவு மிருக்கிறது.

மருத்வதி:—இதுவே போதும்! குறி சொல்வதாகத் தெரிவித்தாயே! ஏதோ தெரிவி, எவ்விதம் தெரிவிப்பது?

குறத்தி:—கையைப் பார்த்துக்கொண்டே சொல்வேன்.

மருத்வதி:—ஓ ஹோ! அப்படியா! ஆனல் என் கரத்தைப் பார்த்து சொல் பார்ப்போம்? (கையைக் காட்ட)

குறத்தி - கஜல்.

ஆ ஹா! அம்மே! இந்தக் கையைப்போல் யான்
அவனியிலெங்குங் கண்டதில்லை (கொ)
ஓ ஹோ! உனது கவலைதீர்ந்து சுகமா யிருப்பாய்
உத்தமியேயினி தீர்ப்பே னுன்தொல்லை

தரு மருவ வருவாய்.

மதி வதனி
மாருமல றமிடுங் கை
வல்லநெறி தவருத கை
நாராயண ரேகையிக் கை
நயந்தமு தளித்திடுங் கை
கோறியதைத் தந்திடுங் கை
கோகனகப் பொன்தருங் கை
திராப்பசி யாற்றிடுங் கை
சிந்தாகுலந் தீர்த்திடுங் கை
சிவனடியார் தம்மைத்
தொழுதிடு மிந்தக் கையே (ம)

ஆ ஹா பேஷ்! இப்பேர்ப்பட்ட ரேகையுள்ள கையைப்போல் அந்தத் திரிமூர்த்தி தேவிகட்கு மில்லே. ஆபி நான் குறிசொல்கிறேன் கவனித்துக்கேள்! என்மேல் சாமிவரும், நீ பயப்படாமலிரு! தைரியமா யிரு.

மருத்வதி:—நல்லது! சீக்கிரமாகக் குறிகள் சொல் பார்க்கலாம்.

குறத்தி:— மகாபாக்கியம் ஆபி.

தண்டகம்,

ஓம் க்றீம், ஸ்ரீம் லியுங் கிலியும், சவ்வும் வவ்வும், ஓங்காரி, ரீங்காரி, ஆங்காரி, மாயி, மகம்மாயி, மஹம்மாரி, வைசூரி, மாதங்கி, மரகதாங்கி, மஹாதேவி, மனோன்மணி, உமாதேவி, மஹேஸ்வரி, வாலே, பராபரி, பைரவி, பரமேஸ்வரி, திரியம்பகி. திரிபுராரி, சூரசங்காரி, காளி, ஓங்காளி, மாகாளி, வேதாளி, எண்டோளி, மஹிஷாசுர மர்த்தனி, சங்கரி, கங்காதரி, சாம்பவி, துர்க்கா, பஞ்சாக்ஷரி, கௌரீ, நீலி, நிமலி, விமலி, அமலி, பகவதி, அம்பா, கல்யாணி, கேதாரி, ஸிம்மவாஹினி, சாமுண்டி, காயத்ரி கபாலி, ருத்ரி, சிற்பரி, தற்பரி, திரிசூலி, சத்தி, பராசத்தி, நடனி, நாரி, நாராயணி, ஜகத்காரணி, பூரணி, புரந்தரி, சுந்தரி, சவுந்தரி பரம்பரி, பரமேஸ்வரி, எக்ஷணிரக்ஷணி, ஜடாதரி, சடாஹரி, கங்காதரி, பராசத்தி நமோ நம: என் முடியிலமர்ந்து நல்வாக்கு வேணும், வசிவசி ஓம் சுவஹா!

(தெய்வம் வந்து ஆடுதல்)

ஹா! ஓ ஹோ! ஏ ரிஷிபத்தினி! எதோ இப்படி வந்து நில்.

தரு, பஹு—தோரே ஸமு.

திருப்ாலன் உந்தனுக்கு பிறந்திடுவான் (ஒ)
வருந்தாதே யம்மா வஞ்சியே சும்மா
வயது பதினாருக என்றுமே மக விருப்பான் (ஒ)

சிவனருளாலே செய்தவ மேலே
சிறுவன் மகிழ்ந்திருப்பான் என்றுமே சிரஞ்சீவியாய் (ஒ)

காலனும் வீழ்வான் கண்மணி வாழ்வான்
பாலனல் நீங்களும் சாயுஜ்யம் பெருகுவீரே (ஒ)

என்றும்பதினாருக இருப்பானே மேலாக
இன்றுமே சத்யமாகச் சொன்னேனே இனிவுடனே (ஒ)

தெய்வலோகம் சென்ற ஐயர் நாணமாய்க் குன்ற
நொய்குவார் பின்பு சிவனல்வரம் நீங்கள் பெருவீர் (ஒ)

அம்மே! தெய்வலோகம் சென்ற உன் நாயகர் அவமானப்பட்டே வருவார், புத்திர னில்லார்க்குச் சுவர்க்கமே கிடையாது' அவர் வந்ததும் பரமேஸ்வரனைக் குறித்து தவம் புரிந்தால் புத்ரபாக்கிய மளிப்பார் தடையில்லை, அச்சிறுவன் என்றும் பதினாருக சிரஞ்சீவியாய் வாழ்குவான். அதனல் நீங்களும் மோக்ஷ சாம்பிராஜ்பத்தை யடைவீர் சஞ்சலப்படாதே! சந்தோஷமாயிரு! நான் சென்று வருகின்றேன் விடைகொடு ஆயி.

மருத்வதி:—நல்லது பெண்ணே! இந்தா முத்தாரம் பெற்றுக் கொள் சென்று வா!

குறத்தி:—அப்படியே, அம்மே! மங்களமாக யிரு.

(போகிருள்)

2. சீன் . தெரு-

குறவன் - தரு.

(சிங்கியைக் காணேனே)

எங்கினுங் காணேனே என் சிங்கியை (ஓ)
இங்கு மங்கும் தேடி எங்கு மலேகிறேன்
தங்கு மிடமின்றி லொங்கி நின்ருளோதான்

எங்கு சென்ருளோ தெரியவில்லையே! என்னேரமாகத் தே[illegible] கொண்டு வருகிறேன் காணுமே! ஐயோ என்னசெய்[illegible]

ளந்த பயல்கள் துடர்ந்தார்களோ! அரை
தவளாச்சே! நான் தேடித்தேடிக் கண் மழு

தரு.

கொண்டை யலங்காரி கோமள ஒய்யாரி
கண்ட விடந்தேடிக் காணேனே கெம்பீரி (ள)

அடியே சிங்கி! பிரியாத மயிலே! மனமோகனக் குயிலே! அடி ஒயி
லே! எங்கே போயிருக்கிறாய்.

தரு.

அஞ்சுகமே மானே அன்னநடையாளே
வஞ்சிஎன் செந்தேனே வாராய்நீ இவ்வேளே (எ)

அடி! கண்ணே! ஒண்டியா யலைகிறேனே! என்னைத்தேடி நீ எங்கு
அலைகிறாயோ! ஆ பச்சைப் பசுங்கிளியே, கன்னங்கறுத்த
வளே.

குறத்தி - தரு. துருகிவாலங்கேரலையோ.

ஆண்டைமாரே என் கணவன்
எங்கே போனாரோ - அவர்
எங்கே சென்றாரோ - தேடி
யிங்கே வந்தாரோ - என் (ஆ)

கஞ்சிபெ காண்டாரச் சொல்லி
காட்டுக்குப் போனாரே அங்கு
காத்திருந்தேன் பார்த்திருந்தேன்
காணோமே நேரே மனந்
தோணேனே சீரே என் (ஆ)

காயுங் கருவாடுந் தான்
கடிச்சிதின்னக் கொண்டாந்தேன் என்
கட்டழக னின்னும் வரக்
காணோமே இங்கு அவர்
போனது எங்கு என் (ஆ)

கால்களிலே சுஜ்ஜைகட்டி
கலக லென்று வருவாரே
கலங்கிநின்றேன் வரவே காணேன்
காசுந் தருவாரே என்
நேசம் பெருவாரே என் (ஆ)

...மாரே என் ஆசை சிங்கனைப் பார்த்தீரா! பார்த் ...க்கா நான் இங்கே யிருக்கிறேனென்று சொல்லுங் ...என்-ஏ ஐயே சொல்லீங்களா! என்ன! சொல்லி இங்கே அனுப்பிடுங்க!

குறவன்-தரு. ரகுமா ரேதும்.

அடியே சிங்கி எங்கே போனாய்
அங்கு மிங்குந் தேடி னேனே (அ)

கடைத்தெரு வெல்லாஞ் சுற்றி
காணாமல் நானலைந்தேன்
விடச்சிறுக்கி எங்கேபோனாய்
விலவிலர்த்துமே குலைந்தேன் (அ)

சந்து பொந்து எல்லாம் பார்த்து
தாவி எங்குந் தேடினேனே
அந்து பூச்சி போலே நானும்
அலைந் தலைந்து வாடினேனே (அ)

அடியே சிங்கி! எங் கெங்கே தேடினேண்டி உன்னைக் காணோமே! அகப்படவில்லையே! இந்நேரவரைக்கும் நீ எங்கேயடி போயிருந்தாய்? சொல்லேன் இப்படி!

குறவன்-தரு.

குறத்தி-தரு. (கொல்லையில் வந்தநரியை.)

ஊரிலேநான் பச்சைகுத்தி
உயர் வான குறியும் சொல்லி
நேரிலே வந்தேனை ஐயே
நேயமாக நானே மெல்லி
எந்தன் சிங்கா (ஊ)

குறவன்-தரு.

மங்கையே உன்னாலே
மனமு மிக சோர்ந்து
எங்கினும் தேடினேன்
எந்திழை உட்கார்ந்து (...

குறத்தி-தரு.

தோட்டத்திலே நரி வந்ததை
தூரத்திக்கொண்டு ஓடி னேனே

வேட்டு போட்ட
வேலியோரம்

குறவன்-தரு.

அந்தயிட
அன் மே தேடி
உந்தனைக் காண
உருகியே வாடினேன்

குறத்தி-தரு.

ஏரிக்கரை மீதே போம
ஏதோ ஒன்று எனைமிர
ஓரிபோல துரத்தி வர
ஓடிவந்தேன் உன்னைக் கிட்டி
எந்தன் சிங்கா (ஏ)

குறவன்-தரு.

சின்ன யிடை யழகி சிங்கியே
சிங்காரப் பூ வழகி சிங்கியே
மங்கையே கறுப்பழகி

அன்ன நடையாளே
மின்ன லிடையாளே
பின்னற் ஜடையாளே
பொன்னி னுடையாளே (சி)

அஞ்சுக மே தேனே
கொஞ்சுங் கிளி மானே
சஞ்சலமாய் வீணே
நெஞ்சம் வாடி னேனே (சி)

மகிழம்பூ வாசியே
அகிலப்ர காசியே
சுகமுற்ற நேசியே
புகழு முல் லாசியே (சி)

குறவன்:—பேஷ், ரொம்பவும் சந்தோஷமாச்சுது! எப்படியும் வந்து தரிசனந் தந்தாயே அதுவே போதும் சிங்கி.

த்தி:—ஏ சிங்கா! இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தேனே நீ என க்கு சந்தோஷப்படுத்தவேணுமே அதற்கெப்படி!

...காரக்கண்ணி.

| | | |
|---|---|---|
| | போக | வேணும் |
| | யிருக்க | வேணும் |
| ...சாக்க | வாங்க | வேணும் |
| ...ம நானும் | ஆட | வேணும் |
| ...லா வாங்கி | கட்ட | வேணும் |
| தாழம்பூ | முடிக்க | வேணும் |
| உல்லாசமா | யிருக்க | வேணும் |
| உத்தமனே | மகிழ | வேணும் |
| ...வன் - பாலமணி | வாங்க | வேணும் |
| பளிச்சென்று | கட்ட | வேணும் |
| நீலமணி | வாங்க | வேணும் |
| நீயும் நானும் | கட்ட | வேணும் |
| குறத்தி - கிரைமணி | வாங்க | வேணும் |
| கின்காப் | ரவிக்கை | வேணும் |
| நாஸ்ர் கொக்கு | தின்ன | வேணும் |
| நானும் நீயு | மிருக்க | வேணும் |
| ஷோக்கு | ஷோக்குதான் | சிங்கி |
| டாக்கு | டீக்கு தான் | சிங்கி |
| குறவன் - பக்கத்திலே | நீ யிரடி | பலே சிங்கியே |
| குறத்தி - கக்கத்திலே | நீ யிருடா | பலே சிங்கனே |

குறவன்:—பேஷ்! இப்படியல்லவோ யிருக்கவேணும்! அடி சிங்கி நேரமாகுது இனி யிங்கே யிருக்கக்கூடாது ஆகையால் நா மிருபேருமாக

தரு. மாரீமே காரீகு.

ஆரணங்கே நாம் பஜாருக்குப் போகலாம்
அஞ்சுகமே அடி கிஞ்சுகமே
பலே பேஷ் பேஷ் பேஷ் அடி (ஆ)

குறத்தி - தரு.

மாரா கெம்பீரா ஒப்பாரா சிங்காரா
வந்திடுறேன் சுபம் தந்திடுறேன்
வஹ் வாரே வஹ்வா...
பலே ஷோக் ஷோக் ...டீக் (ம...

—(போகிறார்கள்.)

குறவன் அடி சிகப்புமணி கருப்புமணி
சேர்ந்து வாங்கலாம்

குறத்தி சிங்கா சிட்டிசேலே சாயசேலே
ஜிகுறு வாங்கலாம்

குறவன் அடி சில்க் சொக்கா சில்க் நிஜார்
சிங்கி வாங்கலாம்

குறத்தி ஆம் சில்க்கு வாங்கலாம்
பசும் மில்க்கு வாங்கலாம்

குறவன் ஜிமிக்கை கம்மல் வாங்கித்தாரேன்
சீக்கிரம் வாடி

குறத்தி வெள்ளி காப்பு வாங்கு ரோஜா
சோப்பு வாங்கு பொன்
சீப்பு வாங்கு - மத்
தாப்பு வாங்கு

குறவன் வாங்கித் தாரேன்
வாராய் வாராய்
நேரிழையே அடி (ஆ)

(ஆடிக்கொண்டே உள் செல்லல்)

மிருகண்டேயர் தரு.

(வீணனை ஏன் படைத்தாய்)

தெய்வமே இந்த தீயனை ஏன் படைத்தாய் (தெ

தெளிவே திலா ஒளிவே யிந்த
எளியேன் வெறும் மல டாகினேன் (தெ

சிறுவனிலாக் குறையதாலே
கரைகிறேனே தாணிமேலே (தெ)

பிள்ளைபெருதவர்க்கு இல்லையாமே சொர்க்கம்
வெள்ளையாய் நாரதர் வியாசரும் தர்க்கம்
துள்ளிக்கூறினுரே தூயஞான வர்க்கம்
தள்ளினுரே தலைகீழாய்
தடபுடலொடு கட கட வென (தெ)

ஆஹா நாம் தெய்வலோகம் போய் தேவேந்திரனைக் கண்ட சமயம் அங்கு முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்

தெண்ணூயிரம், மஹாரிஷிகளும், அஷ்டவசுக்களும், திக்பாலர்களும், தும்புரு நாரதர் ஜனகாதியர் புடைசூழ்ந்திருக்க, அரம்பாதியர்கள் நடனமாட, சந்தோஷ சாகரத்திலிருக்குங்கால், நானந்த சுதர்மசபையை யணுகவும், அத்தகைய பெருங்கூட்டங்களி னின்றும், வியாசரும், நாரதரும் முன் வந்து, பிள்ளையில்லார்க்குச் சுவர்க்கமில்லையென்றும், அத்தகைய மலடர்கள் இங்குவந்து தெய்வ சபையைப் பார்க்கக்கூடாதென்றும், மீறி வந்திருப்பார்களேயானால் தலைகீழாகப் பூமியிற் றள்ளிவிடப் படுவார்களென்றுங் கூறினதை யான் கேட்டு, ஐயுற்று, சற்றிடைந்து நின்று, மெல்லிய குரலோடு அபுத்ரனெனும் வசை நீங்குவதற்குப் பரிகாரம் யாதெனக் கேட்கவும், அன்னவர்கள் என்னைக்கண்டு மிக்க சினங்கொண்டு, அடே மஹா பாவி! சண்டாளா! மலடா! அபுத்ரா! சீ சீ இத்தகைய ஸகஸை நீ பார்க்கத்தகுமா! இங்கு நீ வரலாகுமா! சீ சீ! அறிவுகெட்டவனே என்று இன்னும்பலவாறுகப் பேசி, ஏசி, தலைகீழாக என்னை பூமியில் தள்ளிவிட்டார்களே! இதற்கு மீறின அவமானம்வேறு வேண்டுமா! இனி இந்த ஜன்மமெதற்கு! ஹே பரமேசா! ஜகதீசா! இப்படியும் மலடனுயிருக்கப் பிறப்பிக்கலாகுமா! சர்வேசா! ஐயோ நம் மனைவி எப்படி ஆசையாய் வழி பார்த்திருப்பாளோ, நாம் புத்திர பாக்கியம் பெற்று வருவேனென்பதாக வழிமேல் விழிவைத்து மிக்கப்பேராவாவுடன் எதிர்பார்த்திருப்பாளே! நாம் சென்று இவ்விஷயத்தைக் கூறினோமாயின் எப்படிவருந்துவாளோ! ஐயோ என்னசெய்வேன் இதற்கு! தெய்வமே!

## 3. சீன் . ஆஸ்ரமம்.

மருத்வதி - தரு. (தனிமரமாகினேனே)

மனது சஞ்சல மாகுதே எந்தன்
மாமுனிவரைக் காணேனே எந்தன் (ம)
எனது நாயக ரங்கு
எவ்வாறு யிருக்கின்றாரோ
ஏதும் அறியேன்
மாதுங் தெரியேன்
சூதுங் குறியேன் எந்தன் (ம)

நம் பிராணபதி தெய்வலோகம் சென்றிருக்கிறார்களே அங்குஎப்படியிருக்கின்றாரோ! நல்லபடியாக புத்ரவரம் பெற்று வருகின்றாரோ! யாதோவென என் மனதில் ஏதோ ஒன்று சொல்லுகிறது, இதனால் பெருஞ் சந்தேகமாகவே தோன்றுகிறது? என்ன காரணமோ தெரியவில்லை? ஆ பிராணபதி! சீக்கிரம் வரலாகாதா! என் கலக்கத்தைத் தீர்க்கலாகாதா! சஞ்சலத்தை யொழிக்கப்போகாதா! என்னசெய்வேன் தனியாகயிருந்து தவித்துக்கொண் டிருக்கிறேனே! பிராணபதி, பிராணபதி சீக்கிரம் வந்து என் மனசஞ்சலத்தை தீர்த்துவிடுமே! ஏ! மனமேபதறாதே பொறு பொறு! தயங்காதே! கலங்காதே! என் பிராணபதி புத்ரபாக்யம் பெற்று சுகமாகவேவருவார் அதைப்பற்றி சோகமுறாதே!

மிரு:—ஆசீர்வாதம் கண்மணி! (வந்தித்தல்) கண்ணே நீஎன் இப்படி வாடின முகத்தோடுங்கூடி யிருக்கின்றாயே! யாது காரணம் காதலி! யான் சென்றபின் இங்கு ஏதேனும நடந்ததா என்ன! எனிப்படி யிருக்கின்றனை! விஷயந்தானென்ன?

மிருகண்டேயர் தரு. (நாயாஜோபன)

நாதா கேளும் நடந்ததை ஞானரூபா
ஞான ரூபா மறை மோன தீபா பிராண (நா)

வேதாரீர் சென்றதும் விண்ணில்வாழ் கன்னியரும்
விடாய்ப்பட்டு வந்ததால் வேண்டியவமுதிட்டேன்
மாதர்களுண்ணாமல் மக்களுண்டா வென்றார்
மகவில்லை என்றேனதால் மங்கையர் புசிக்காமல்
மாபாவியுன்னோமென்று வஞ்சியர் விண்ணேகினர்
மனம்நோகச் செய்துபோக வந்தாள்தெய்வகுறத்தி
மாதேவனைக்குறித்து மாதவஞ் செய்வீராகில்
மகனும் பிறப்பானென்று வழுத்தினாளவளுமேலும்
வயது பதினாறாக வாழ்வானும் சிரஞ்சீவியாய்
வனிதை இவ்வாறுசொல்லி வாழ்த்திபோனாள் சுவாமி
மன்னவா தாங்களும்போய் வந்தசேதிதானென்ன
வழுத்துவீர் விபரமாக மனமது மகிழ்ந்திடவே (நா)

பிராணதுரையே! தாங்கள் சென்றபின் நடந்த விஷயமிவ்வளவுதான் இது தவிர வேறொன்றுமில்லை.

மிரு:—அப்படியா நடந்தது?

மருத்வதி:—பிராண காதலா! தாங்கள் சென்றுவந்த விஷயம் எப்படி! சுபம் தானே?

மிரு:—நாயகி—நான் தெய்வலோகம் போனவிடத்தில் நேர்ந்த விஷயத்தைக்கேள் தெரிவிக்கிறேன் கண்மணி.

தரு, (டாரேநாமமகம்மது)

நானும் போன சேதி கேளாய்
நங்கையே நான் மிக
பங்கமாய் வந்தே னடி என் கண்ணே
மங்கையே நொந்தேனடி பெண்ணே (ம)

மானே யங்கனம் நாரதரும்
மாதவ வியாசரும்
மா தேவ ராதி யரும் கூடி

மக்க ளில்லா தார்க்கு
சொர்க்க மில்லை யென்றும்
வரக்கூடாதென்றும் சொன்னார் மாபாவி
பரம சண்டாள னென்றார் அடி

மாதே யதைக் கேட்டு
மாதவரால் கீழ் தள்ள
மானிலம் வந்தே னடி வெட்கித்து
நானுமே நொந்தேனடி பெண்ணே (நா)

என் விஷய மிவ்வளவுதான்! இப்படி நாம் மலடரா யிருப்பதை விட மறித்தலே நலம், அப்படி மீறி மடிவோமாயின் நரகக் குழிதான் கதி! ஆகையால் நாம் சுரம் சென்று, அந்த சாக்ஷாத சர்வேஸ்வரனைக் குறித்து தவம்புரிந்து, புத்ரவரம் பெறவேண்டியதே தான்! இனி கவலைப்படாதே! யோசியாதே! புறப்படு சிக்கிரம்.

மரு:—மகா பாக்கியம் சுவாமி! அடியாள் சித்தமாகவே யிருக்கிறேன். அங்கு போனால்தான் புத்ர வரமடைகுவோமென்று தெய்வலோகக் குறத்தியும் தெரிவித்துப்போயிருக்கிறாளல்லவா! அப்படியே செல்வோம் வாரும் பிராணகாதலா.

மிரு:—காதலி! என்னசெய்வோம்!

தரு. (அருமைக்கண்மணியே)

நாமும் மைந்தரில்லாப் பாவி யா னேம்
பாரில் மலடரென்றே கெட்டுப் போனேம் நா மும்(மை)
நமக்கு சந்ததியில்லாமற் போச்சே
தாழ்மைப்படக் கால மா ச்சே எந்த
அந்தகரைக் கெடுத் தோமோ யாரை
ஐயமிடாமல் தடுத் தோமோ அவரை
நொந்திடவே விடுத் தோமோ யாதும்
நோன்பெடாமற் கெடுத் தோமோ நாமும் (மை)
(போகிறார்கள்)

---

4 . வது சீன்.—கானகம். தவமிடம்.

மிருகண்டேயர், மருத்வதி.

தரு, பியாக் - ஆதி.

சம்போ சிவ சங்கரா
சந்த்ர சேகரா ஹரா (ச)
உம்பர்கள் மகிழும் பரா
உமாபதி பஞ்சா க்ஷரா
நம்பி நின்றோம் நிரா தரா
நாளுங் காரும் பரமேஸ்வரா (ச)
நாராயண சாமி துதி
ஞான மெய் வேதவா ரிதி
தீராய் சஞ்சலம் மா நிதி
திரி புராரி உம் தாள் கதி (ச)

ஹர ஹர மஹாதேவா! சம்போ சங்கரா! சச்சிதானந்த சொரூபா! பசுபதி! தயாநிதி! காத்தருளல்வேண்டும், புத்திரக்கலி தீர்த்தருளல் வேண்டும், சிவ சிவா ஜே சங்கர்!

(பார்வதி பரமேஸ்வரர் ப்ராப்தம்.)

பரமன்:—கல்யாண் பக்தா! கண்களைத் திறந்து பார்! நீ கோறிய படி பிராப்தமானேம்.

தரு. தில்பரீநஹி

மாமுனியே யுன் தவத்திற்கு நானே
மனமகிழ்ந் தேனே
மதுரமுடன் எது வேண்டுமோ
அதனைக் கேளா யிதோ தருகிறேன்
இயம்புவாய் நீயே இனி
ஜயமாய் வாழ்வாயே மிருகண்ட (மா)

வசனம்.

மிருகண்டுமுனி! நீ செய்த தவத்திற்கு மகிழ்ந்து பிரசாப்தமானோம்! யாதுவேண்டுமோ கேள் பூர்த்தி செய்விக்கிறோம்.

மிருகண்டேயர், மருத்வதி

(தரு. கண்ணிழந்து)

சிவ சிவமே சிவா னந்தமே
சீரா யினியே திராய் பந்தமே
பவா னந்தனே பரா பரனே
பசு பதியே பைரவி சங்கரனே (சிவ)

கருணா கரனே கங்கா தரனே
காத் தருளுவாய் கபாலீசனே
அருவா யுருவா யமைந்த சோதியே
பொருளே பதமே போற்றினேம் நீதியே (சிவ)

ஜே ஸங்கர்! ஹரோ ஹரோ சம்போ சங்கரா! கங்காதரா? உமா தேவிசமேதா? கைலாசபதே!

த ரு. (தர்மசம்வர்த்தனிமாயம்மா)

புத்ர பாக்கியம் தரவேண்டும் நாதா
புகழ் மலர் பாதா
புனிதமுடனே யாட்கொளும் நீதா
பொன்னடி தாதா
புண்யா மனக்குறை தீர்க்கவுநாதா (பு)

சித்தப்படி நிலவுலக மதிலே
சிறுகுழவி யின்றி தியங்கினேன் மிதிலே
உத்தம முடன் மகவு தரும்படி
இத்தின முமது வரமும் பெரும்படி

என்னையனே க்ருபை தந்தருளும்
ஓம் பசுபதியே
எங்கிடாமலே வர முகந்தருளும் (ச)

சுவாமி சர்வேசா! எங்கட்கு புத்திரவரந் தரவேண்டி நின்றோம் ஹரஹர சங்கர மஹாதேவா!

பரமன்:—அப்படியா வேண்டும்! ஹே! பக்தா மிருகண்டு! நீங்கள் பூர்வ கர்மானுசாரத்தின் பொருட்டு மக்கட்பேறில்லையே என்ன செய்வது! ஆனால் ஒன்று, நான் வாக்களித்துவிட்டேன்! அதை மீறப்படாது, ஆகையால் உங்கட்கு ஞானர்த்தமுணராதவனுகியும், மூடனுகியும், கள்ளங் கபடனுயும், பொய் சூது முள்ளவனுகியும் நூறுவயதுள்ள பாலன் வேண்டுமா? ஞானர்த்தமுள்ள ஈவு இரக்கம் பச்சாபம் ஒழுக்கத்திற் சிறந்த நல்லறிவுள்ள சிவபக்தனுக பதினறு வயதுள்ள பாலகன் வேண்டுமா? இந்தப் பாலகன் மீண்டும் என்னிடத்திலேயே உடனே சேர்ப்பித்துவிடவேண்டும் என்ன விரும்புகின்றனை?

மிரு:—பிராணநாயகி! சர்வேஸ்வரன் தெரிவித்ததற்கு உன் மனமெப்படி! விடை பகர்வாய்.

மரு:—பிராணகாந்தா! தங்கள் மனது எப்படியோ அப்படியே தான் எனக்கும்! ஆனல் நூறு வயதுள்ள புத்திரனிருந்தால் நமக்கு வாழ்நாள்வரை துணையிருப்பானென்கிற நோக்கம் ஏற்படுகிறது, அப்படி ஏற்படினும் மனமோ யில்லை! பிறகு தம் திருவுளச் சம்மதமெப்படியோ? அப்படியே செய்வீர் பிராணபதி

மிரு:—கண்ணே! நூறுவயதுள்ள புத்திரனை யடைந்தோமாகில் நற்கதியடையமாட்டோம் நமக்கு இழிச்சொல்லே ஏற்படும், ஆனதுபற்றி? பதினறு வயதுள்ள பாலகனே சிறந்தவனென்று புலப்பட்டது, அதனல் நற்கதியே யடைவோம்.

மரு:—ஆம் பிராணபதி! தங்கள் மனம்போலவே செய்யும்.

மிரு:—நல்லது! சர்வேசா! தீனதயாளமூர்த்தி! பதினறு வயதுள்ள பாலகன்தான் வேண்டும், இவ்விதமாக அருள்புரிந்தால் சந்தோஷமா யிருப்போம் கிருபாநிதி!

பரமன்:—சந்தோஷம் பக்தா!

தரு. (ஷாஹேவாலா)

மதியில் மிகுந்த மிருகண்டா உன்
மனமதுபோலவே என்தொண்டா
பதினறு வயதுள்ள பாலனைத்தான்
பார் மகிழத் தந்திட்டேன்
யார் பெருவாரிதுபோல் தான்
அவனியி லுனதிட அறமது நிலைத்திட
கவலைகள் தீர்ந்துமே கருணையும் பலித்திட
கல்யாண் கல்யாண் மிருகண்டா
களிப்புடன் வாழ்வாய் என் தொண்டா (ம)

பக்தா! உங்கள் மனப்படியே பதினறு வயதுள்ள பாலனையே தந்தோம் இதனல் புனிதமடைந்தீர்களாக.

மிருகண்டேயர் மருத்வதி

தரு. (ரவிகுலபூபா)

சிவ சிவ சம்போ சின்மய ரூபா
பவ மதைத் தீர்த்த பைரவி பூபா
குவ லய சம்ப்ரம்ம குகனே பிரதாபா
நவ குண சுப்ர தீபா ஓம் (சி)
சுர பதி நாராயண சுவாமி தயாபரா
திரி புர சம்ஹார தினகர சசிதரா
பரிகரித் தாண்ட பசுபதி ருத்திரா
ஹர ஹர சிவ சங்கரா (சி)

ஜே ஸங்கர் ஹர ஹர மஹாதேவ்! நமப்பார்வதி பதயே! நமஃ

(ஈஸ்வரன் மறைதல்)

## 5 - வது சீன்—தெரு.

### நாரதர் திருப்புகழ்.

நாத விந்துக ளாதி நமோ நம
வேத மந்த்ரசொ ரூபா நமோ நம
ஞான பண்டித சாமீபா நமோ நம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தம யூரா நமோ நம பரசூரர்

நாமோ வைகறையிற் றுயினீற்று, ஸ்நானுனுஷ்டானங்களைச் செய்து, மூன்றுலகிலும் சென்று, ஹரி ஹர பிரம்மாதிகளைத் தரிசித்து, ஆசிபெற்று, கடைசியாக இந்த பூவுலகம் வந் மிருகண்டுமுனிவர் முன்பு தெய்வலோகம் வந் மக கட்பாக்கியமில்லாதார்க்கு சொர்க்கமில்லையென்றும், அந்த கையமஹா பாவிகள் இந்த தேவஸஹஸைக்கு வரக்கூ ன்றும் கூறினபோது, அன்னவர், மனம்குன்றி நான் தெரியாமல் வந்துவிட்டேன் புத்ரபாக்கியத்திற்கு வரமளிக்க வேண்டுமென்றும், அதற்கு பரிகாரம் கேட்கும்போது, இப்பேர்ப்பட்ட மஹாபாவி சண்டாளன் இங்குவரப்படாதே நீஎப்படி வந்தாயென்று கண்டித்து, கழுத்தைப் பிடித்து கெட்டி, தலைகீழாகப் பூலோகத்தில் தள்ளிவிட்டோமன்றோ! அன்னவர் அதே ஏக்கமாகவந்து பரமனைக்குறித்து தவஞ் செய்யவே, சர்வேஸ்வரன் உடனே சுப்ரசன்னராய் எழுந்தருளி, புத்திரபாக்கியம் தந்து மறைந்தனர், இப்போது அந்த பாலகனுக்குமார்க்கண்டனென்பதாகப் பெயரமைத்துப் பள்ளியில்விட சகல வேதசாஸ்திரங்கள், கலைக்கியான மனுவிக்கியானங்களில் தேர்ந்துவிட்டான். இப்படி விருத்தியாகிய குமாரனைப்பற்றிய மாதாபிதாக்கள் மிகவும் மெலிந்து, பாலனுக்குப் பதினறு வயதானதும் எமன் வந்து, கொண்டுபோவானே என்ன செய்வதென வருந்திக்கொண்டிருக்கிறார்கள். அங்ஙனம் நாம்சென்று தேறுதலால் ஹிதமுரைத்து, பாலன் மார்க்கண்டனுக்கு தத்துவாதிக பஞ்சாக்ஷர முதலானவைகளின்மார்க்கங்களை உபதேசித்து வருவோமாக அதுதான் சரி!

(போகிறார்)

6. சீன் . ஆஸ்ரமம்.

மருத்வதி - தரு. (துனியாசாரி)

மகனைப் பிடிக்க மறலி வருவானே
மனமது நடுங்குதே என் துரையே

மிருகண்டர் தரு.

அகிலத்தில் நாமென்ன செய்வ திதற்கோ
அழுவதா லாவ தொன்றுமில்லை

மருத்வதி தரு

ஜகதீசன் க்ருபை எப்படி யாமோ
தளருதே என்மனம் என் துரையே

மிருகண்டர் தரு.

தயங்கிட வேண்டாம் மயங்கிட வேண்டாம்
கி..ங்கிட வேண்டாம் பயப்பட வேண்டாம் (ம)

நீ இப்படி வருந்துவதிற் பயனில்லை! வருவதுவந்தேதீரும் களிப்பாகவே இரு காதலி.

மார்க்கண்டேயர் - தரு. (வடிவுடை நறுமலர்)

இரு பத மலரதைப் பெருமையாய்க் கருதியே
அறு வித நறு மலர்ப் பறித்துமே யருச்சித்து
சிறுவனும் பணிந்தேனே மிக
வந்தனம் தந்தனம் (சி)

ஆறு சாஸ்த்ரமும் நான்கு வேதமும்
அறிந்தேனே பதினெண் புராண பேதமும்
அதிகமா ஹிதிஹாச முதலிய நாதமும்
அறிந்தேனே கீதமும்
தாய் தந்தையரே
தெரிந்தே னத் வீதமும் (இ)

நமஸ்காரம் தாய் தந்தையரே! நான் வித்யாசாலை யடைந்து, வித்யா குருமூர்த்தியிடம் சகல வேத சாஸ்திர புராணங்கள் முதலானவைகளையும், ஐயந்திரிபர வுணர்ந்து வந்தும், எந்தனைக் கண்டு களிக்காமல், தாங்கள் ஏன் ஓர்வித கலக்கமாயிருக்க வேண்டும்! யாது காரணம், அதன் விபரத்தை அடியேனுக்குதெரிவிக்கவேண்டும் பெற்றோரே.

மார்க்கண்டேயர் - தரு (அச்சாமோ...)

ஆஹா எந்தன் பெற்றோரே
அழுவ தேனோ என்னேரே என்
அன்னையே பெற்ற தந்தையே (ஆ)

வந்த விபத் தென்ன னோக
வழுத்துவீர் விபரமாக
வாதேது சூதேது
ஓதிடும் தாய் தந்தையே (ஆ)

பெற்றோரே! தாங்கள் எனக்கு ஆசி கூறாமல் இப்படி அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய் சிந்தாகுலத்துடன் இருக்கவேண்டிய காரணமென்ன! தாய் தந்தைகளே! இப்படி மௌனமாயிருப்பதேன்.

தரு. (மைஹோந்தும்பேகுருபான்)

ஏனோ வருந்து கின்றீர்
எந்தன் தாய் தந்தையரே (ஏ)

எனக்குமே யதை விபரமாக
இயம்புவீர் தாய் தந்தையரே (ஏ)

தானே இருந் திருந்து
சஞ்சல மாவதேனோ நொந்து
தாய் தந்தையரே
சந்தோஷமாய்க் கூறுவீர்
தயங்கி மயங்கிடாதீர் (ஏ)

பெற்றோர்களே! இப்பேர்ப்பட்ட கடுந்துயரம் நேரிட்டதற்குக் காரணமென்னமோ! விஷயந்தானென்ன! இப்படி தேம்பித் தேம்பிக் கண்ணீர் ததும்பும்படி விசனமுறுவதென்ன! தெரிவியுங்களேன் உங்கள் குழந்தையாகிய எனக்கு!

மிரு:—கண்ணே! எங்கள் வருத்தத்திற்குக் காரணம் நீயேதானப்பா!

மார்:—தந்தையே! என்ன இது! இப்பேர்ப்பட்ட துயரம் வரும்படியாக நான் என்ன செய்தேன் தங்களுக்கு! தெரிவியுங்கள் எனக்கு?

மிரு:—கண்மணி! நீ யொன்றும் தீங்கு செய்யவில்லையப்பா!

மார்:—பிறகேன் இவ்விதமாக இருக்கவேண்டும்?

மிருகண்டேயர் தரு (துமபினமோரி)

பாலகா மார்க்கண்டா பதறுதே சடலமே
பாழும் மறலிவரும் நாள் வந்ததே
சீலனே யிதற்கென்ன செய்குவோமிப்போது
சிதறிடவே திகில் மிகத் தந்ததே

மார்:—இவ்வளவுதானே, எல்லோருக்கு முற்றதுதானே, எமனர் வரும்போது வரட்டுமே! இப்போ ததற்கென்ன, எப்போது பிறந்தோமோ அன்றே சாவு உண்டென்பது நூல்கள் கூற வில்லையா!

மருத்வதி:—அப்படிக்கல்ல! மகனே! உன்னைப் பெறுவதற்கு பரம சிவத்தைக்குறித்து தவம்புரியுஞ் சமயம் சம்பூரண வயது பதினறு என்றே நியமித்து கடவுள் எங்களுக்கு அருள்புரிந் தார், இப்போது உனக்கு,

தரு.

பதினறு வயதென்று பரமனும் நியமித்தார்
பாழுங் குடலது துடிக்குதடா
மதிப்பிலா எமனும் வருகுவானே என்று
வயிறது கொதிக்குதடா (ப)

அப்பா கண்மணி! நாங்கள் உன்னைப்பெற சர்வேசனைக் குறித்து தவம்புரிய அவர் மகிழ்ந்து, சுத்த ஞானசூனியனும் மிக அசேதனனுமுள்ள நூறுவயதுள்ள பாலன் வேண்டுமா! அல்லது ஞானமார்க்க மணியாய் பதினறு வயதுள்ளபாலன் வேண்டுமா எனக்கேட்க, நாங்கள் பதினறு வயதுள்ள பா லன்தான் வேண்டுமெனக் கேட்க! அவ்வாறே ஸாக்ஷாத் பர மேசன்மனமகிழ்ந்து உன்னை அளித்தனர். ஆதலால் உனக்கு பதினறு வயதுள்ள சமயம் எமன் வந்து கொண்டுபோவா னே யென மனம் பதறுகின்றதே! குடல் கொதிக்கின்றதே! அப்பா கண்மணி.

தரு. (கானகத்தில் நாமலைந்து)

மறலி யுன்னைக் கொண்டு போக
வருகுவானே என் மகனே (ம)

மிருகண்டர் தரு.

சிறுவனே எப்படி சகிப்போம்
சிந்தை வாடுதே மகனே
சிக்கி நீயும் வருந்துவாயே
சிதறுதே மனம் மகனே (ல)

மருத்வதி - தரு.

அதிக திகிலு மீறுதடா
அதினால்மனம் சோறுதடா
அப்பா நெஞ்சந் துடிக்குதையோ
அருஞ்செல்வமே சிதறுதடா (ம)

கண்ணே! அதை நினைக்க நினைக்க அதிகமாக திகிலுண்டாகிறதே! சஞ்சலமும் ஏற்படுகின்றதே! என்ன செய்வோம் பாலகா.

மார்:— பெற்றோரே! இதற்காக அஞ்சலாமோ! எமனுரை தூஷிப்பதில் யாது பயன்! இப்புவியில் எத்தனை வயதென்று ஈசன் நியமித்தாரோ அதன்பிறகு எமனுருக்கு சொந்தமே தவிர, அதைப்பற்றி தாம இப்படி கலங்குவது நலமல்ல.

ஸ்லோகம்.

ஹரிநாபி ஹரேநாபி பிரம்மநாபி சுரேசபி
லலாட லிகிதாம் ரேக்பாம் பரிமாணம் நஸக்பதே.

என்கிறபடி அந்த அயனெழுதிக்கபடிக்கு தானே நடக்கும், அணுவும் பிசகுமா! ஆகையால் இனி எதற்கும்,

தரு. (சித்திரக் கட்டினி)

அஞ்சவேண்டா மென்தாய் தந்தையரே எந்தன்
ஐயனே நானுந் தவம்
செய்து வாரேன் விடைதந்திடும் (அ)

மருத்வதி - தரு.

எப்படி சகிப் போம் மகனே இனி
ஏங்குதே உள்ளமும்
தாங்க வில்லை யடா (எ)

மார்க்கண்டேயர் - தரு.

செஞ்சடை மேவிய சிவத்தை
தஞ்சமு மாகிய பவத்தை
மிஞ்சி வந்தால் வஞ்ச நமனை
பஞ்சா யோட்டி மிஞ்சிக் கொள்வேன் (அ)

மிருகண்டேயர் தரு.

சொல்லும் போதே மனமே
சோருதே யிந்தத் தினமே
வல்ல நமன் நல்லுயிரை
மெல்லக்கொண்டு செல்லுவானே (ஏ)

விருதாவில் பயந்து வீணில் மெலியாதீர்
பெருந் தவம்புரிவேன் பேணிற்சலியாதீர்
கறுத்த நமன் வாராமல் கவனிப்பேன் அலேயாதீர்

காசினி யீசனைக் கைவிடேன்
பாசங் கொள் நாசனுக் குட்படேன் (அ)

மருத்வதி - தரு.

அலட்சியமாய்ச் சொல்கிறாய் அப்பா மகனே இன்று
குலையது பதறுதே கூற்றன் வருவானென்று
நிலைமிக தளருதே நினைக்கவும் மனமொன்று

நீயோ புகலுறாய் சரியல்ல
சேயே வயிறு பற்றுதே மெல்ல (எ)

மார்:—பெற்றோரே! இது என் கடமையே! தங்களுக் கந்த கவலை வேண்டாம், சந்தோஷமாகவே யிருங்கள்! தங்களுக்கு சர்வேசன் தானே பூரணமான வயது தந்தார் ஆகவே நான் அந்த ஈசனையேகுறித்து நான் தவம்புரிந்து, எமன் வரவொட்டாமற்படி தடுத்துக்கொள்கிறேன், விதியை மதியால் வெல்கிறேன், சஞ்சலம் விட்டிருங்கள் தாய் தந்தையரே.

மருத்வதி தரு (நடந்ததென்ன)

மனமது கலங்குதடா அப்பா
மகனே தவத்தி லுற்ற
மார்க்கண்ட செல்வமே (ம)

மார்க்கண்டேயர் - தரு.

ஒன்றுக்கு மஞ்சவேண்டாம் அந்த
ஓம் சிவ சங்கர
சாம்ப சிவனிருக்கையில் (ஒ)

மிருகண்டேயர் - தரு.

உன்னை எமன் தனக்கு ஒப்பிடவோ முன்னாம்
உயர்தவம் செய்தது பயனில்லை இன்னும்

மார்க்கண்டேயர் தரு.

அன்னை தந்தையர்களே அந்தகன் வாராவண்ணம்
அடியேன் காப்பாற்றிக் கொள்வேன்
அவனியி லிது திண்ணம் (௬)

மருத்வதி - தரு.

காலன் வரும்போதுநீயே கண்டுதிகிலடைவாயே
கண்மணிஎன்ன செய்வோம் கனியேஎம்சேயே

மார்க்கண்டேயர் - தரு,

பாலனைப் பயின்ற தாயே
பழுதாகா தறிகுவாயே
பகர்ந்தேன் சத்தியமாக
அகத்திற் கொள்ளாத நோயே (எ)

தாய் தந்தையர்களே! எல்லாம் வல்ல பரமசிவன் என் மனதிலிருக்க, அந்தகனால் ஒன்றும் முடியாது, அவர் என்னை ரக்ஷிப்பார். அந்தகனை சிக்ஷிப்பார் அதைப் பற்றித் தாங்கள் சிந்தனைப்படவேண்டாம், இனிமீது தாங்கள் எனக்கு விடை கொடுப்பீராகில், நான் சென்று பற்பல தீர்த்தங்களாடி, ஆங்காங்குள்ள சிவஸ்தலங்களோறுஞ்சென்று சர்வேஸ்வரனைத் தொழுது தரிசித்து, மறலி வருகாவண்ணம் செய்துக்கொள்வேன், தவிர அந்த பசுபதி எப்போது தங்கட்கு உத்தம புத்திரனைத் தந்தாரோ, அந்த ஈசனே என் முறைக்கிரங்கி ஆதரிக்கமாட்டாரோ! பெற்றோரே! நீங்கள் எதற்கும்கலங்க வேண்டாம், ஆதலின். அடியேனுக்கு விடை கொடுங்கள் நான் சென்று ஜெபம்பெற்று வருகிறேன், ஆசிகூறி அனுப்புவீர்களாக.

மிருகண்டேயர், தரு. (ஐயையோ முற்பிறப்பில்)

எப்படி பிரிகுவோம் என்கண்ணே உன்னை விட்டு
ஏதுந் தோணவில்லையே கண்மணியே
அப்பனே மார்க்கண்டனே அயனிப்படி யிட்டானே
ஐயையோ என்னசெய்வேன் கண்மணியே

மருத்வதி - தரு.

கிளியை வளர்த்து பூனைக்
கிட்டிட யிடமு மாச்சே
கிறுகிறென்றுள்ளம் சோறுதே என் மகனே
ஒளிவான மணிவிளக்கே
உன்னை எப்படி விடுப்போம்
உள்ளம் பதருதையோ என்மகனே (எ)

அப்பா கண்மணி! போகிறேன் விடை கொடென்று கேட்கின்று யே எப்படி மனம் வந்து அனுப்புவோம், எண்ணி எண்ணி மனங்குண்ணுதே!

மார்:—ஈன்றோரே! இப்படி தடுத்த வண்ணமாகத்தானே யிருந் தால் ஆவதுதான் எப்படி! நன்குணர்ந்துபாரும் மனந்தளரா தீர்கள்.

தரு. பூரிகல்யாணி-ரூபகம்.

சென்று வாரேன் விடைதாரும் இந்த
செல்வனுக்கு கருணை கூறும் நான் (செ)
அன்றுமக்கு வரமளித்த
அந்த ஜடாதரனைக் கண்டு
தென்புடனல் வரமடைந்து
சேயேன் வாரேன் முடித்துக்கொண்டு (செ)

தாய் தந்தையர்களே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள் எப்படியும்ஜெ யம்பெற்று வந்துசேருகிறேன், காலனை வெல்லுவேன்! கன்மத் தைக் கொல்லுவேன், அதனால் உங்களுக்கு நற்கதி கிட்டும்! இதுசத்தியம்! ஈன்றோரே!

மருத்வதி - தரு. (எப்படியகலுவேன்)

என்மனந் துடிக்குதே மகனே மகனே மகனே

மார்க்கண்டேயர் - தரு.

உள்ளபதுவாடாதீர் ஜனனீ ஜனனீ ஜனனீ

மருத்வதி - தரு.

இன்று நான் உனக்கு மேதான்
எப்படி விடை கொடுப்பேன்
ஒன்றுந் தோணவில்லையே மகனே மகனே மகனே

மார்க்கண்டேயர் - தரு.

சமரிலா யீசனாலே சண்டனை வெல்வேன் மேலே
உமக்கும் பலனுண்டாகும் ஜனனீ ஜனனீ ஜனனீ (எ)

மருத்ததி - தரு.

குடலது கொதிக்குதடா கும்பியும் பதறுதடா
நடுங்கக் கொண்டு போவானே மகனே மகனே மகனே (ம)

மார்க்கண்டேயர் - தரு.

மறலி வராமற்றானே வரம்பெற்று வாழ்குவேனே
குறையினி கொள்ளாதே ஜனனீ ஜனனீ ஜனனீ (எ)

அம்மணி! அப்பா! காலஹரணஞ்செய்யாதீர்கள், தடைசெய்வத னுற்கெடுதியேதான்? "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதை கவனியும், தயாபரனால்தங்கள்கர்ப்பத்திலுதித்த அடியேன் அந்த ஈசனையே வணங்கி, காலன் என்னைக் கொண்டு போகாவண்ணம் செய்துகொள்வேன்; ஈசன் கருணை செய்வார்! அப்பா! அம்மா! மனது துணிபாக அனுப்புங்கள் மனதைத் திடப்படுத்துங்கள்!

மருத்வதி- தரு (சஹாரு - சாப்பு)

மனது துணியவில்லை மகனே தனித்தனுப்ப
மாறுதென் செய்வேனப்பா மார்க்கண்ட செல்வமே (ம)
உனைவிட்டு நாங்களும் உயிர்வைத் திருப்போமா
உத்தமா நன்குணர்வா யுள்ளந்துணியலாமா (ம)

மார்க்கண்டேயர் - தரு.

வருந்தினு லாவதில்லை வாழ்த்திவிடை தந்திடும்
மறுக்காதீ ரினிமீது மாதாவே நலங்கெடும்
இருந்தேனு லிங்கு எமன்வந்தா லென்செய்வீர்
எங்காமலனுப்பினல் எல்லாம் நலமாம் பாரீர் (வ)

மருத்வதி - தரு.

குடலைது துடிக்குதே கும்பியும் எரியுதே
குழந்தா யெப்படி பிரிவோம் குணவந்தா மெலியுதே
அடிக்கடி மனமது அனல்மெழு கதைப்போலே
அப்பா உருகிறதே ஐயோ என்செய்வோமேலே (ம)

மார்க்கண்டேயர் - தரு.

இப்படி வருந்தினால் யாது பிரயோஜனம்
இனிதடுத்தாற் றீங்கேபாம் இளகாதீரிங் கனம்
ஒப்பிலா வள்ளலை யோதினு லித்தினம்
ஓங்கியவர் தம்மாலே உயிர்மீட்பே னங்கனம் (வ)

மிருகண்டேயர்:—பாலா! நான் என்னமாய் மனதைத் திடப்படுத்தியும் சரிப்படவில்லை என்ன செய்வேன் கண்மணி!

மருத்வதி:—எப்படி திடப்படுத்தியும் சரிப்படவில்லையே, எவ்வாறுசகிப்பது? உயிருடனே உன்னை அனுப்ப எங்கள் மனமாகப்பட்டது தாமரை நீர்போலத் தத்தளிக்கிறதே? என்ன செய்வோம்! பிரியமனம் வரவில்லையே கண்மணி.

த ரு, (ஆயனாதா)

ஆஹா பாலா என்ன செய்வேன்
அங்க மிக சோருதே
ஐயோ வேதை மிக வாகுதே
அனல் மெழு காகுதே (ஆ)

மார்க்கண்டேயர் - தரு.

அப்பா நீரும் இப்பிடி யாய்
அக முருக லாமோ தான்
எப்படி தான் எனக்கு மாாக்கம்
இயம்பிடா விருப்ப தேன் (அ)

மருத்வதி - தரு

கண்ணே நீயும் கலங்கச் செய்தால்
காவி லெப்படி வாழ்கு வோம்
புண்ணாகுதே புவியில் மனம்
புத்ரா இனிஎன் செய்வோம் (க)

மார்க்கண்டேயர் - தரு.

அருமையும் பெருமையுள்ள
அன்னை தந்தையே உருகாதீர்
கறுமையுள்ள காலன் வந்தால்
கார்ப்பீரோ யோசித்துப் பாரீர் (அ)

மிருகண்டேயர் - தரு.

என்னவித மாய்ச் சகித்தும்
இளகுதேகா னென் செய்வேன்
அன்னீத மாய் பிரிகி றேமே
அகம் துணிய லாமோ தான் (எ)

மார்:—அப்பா! தாமே இப்படி வருந்தினுற் பயந்தானென்ன! இனி தாமதப்படுத்தினல் ஆவதொன்றில்லே! நான் அந்த சர்வேசனைக்குறித்து தவம்புரிந்து, என்னேயும் என் உயிரையும் எமன் வந்து கவருமற்படிக்கு காப்பாற்றிக் கொள்ளும்படியான மார்க்கம் தேடிக்கொள்வேன். இதனல் தங்களுக்கே கண்ணியம்! யாவரு மடைகுவோம் புண்ணியம்! கிலேசம் கொள்ளாமல் விடை யளிக்கவேண்டும். அப்பா! அம்மா! காலமணுகியது, காலன் வருகாவண்ணம் தேடிக் கொள்ளவேண்டுமே? தயைசெய்து விடை தாருங்கள்! இனி கவலைவிடுங்கள்! யாதொரு தீங்கும் நேரிடாமற்படிக்கு செய்துகொள்கிறேன்! தாமதப் படுத்தாமற்படிக்கு அனுப்பும், அதனல் கீர்த்தியடைவேன், அந்த முக்கண்ண மூர்த்தியை தெரிசித்து வரம்பெருவிடில் யாவருக்கும் அபகீர்த்தியே நேரிடும்! ...னல் துலையாத் துன்பமேயாகும்! சதா நரகத்திலுழன்... இம்சைப்படவேண்டியேநேரும்! யோசித்துப்பாரும், ஆ... யால் சீக்கிரமாகத்தானே விடை கொடுங்கள், பெற்றோர்களே! இனி யோசிப்பதிற் பயனே யில்லே! நமஸ்காரம் செய்கின்றேன்.

தர்க்கம் - தரு. (எந்தன் மாலேதாரும்)

| | | | |
|---|---|---|---|
| மார்க் | தந்தையே | சென்று | வாரேன் |
| | தாயே | சென்று | வாரேன் |
| மிரு மரு | போய் நீ | வருவா | யப்பா |
| மார் | சேய் எனே | வாழ்த்தி | யனுப்பும் |
| மிரு மரு | காயம் | நிலேத்து | வாழ்வாய் |
| மார் | கடைத் | தேறு | வேனே |
| மிரு | தடை | யேது | மில்லே |
| மார் | தந்தையே | வாடா | தீர் |
| மிரு | சிந்தையும் | வாடே | னே |

மார் திருவருளைப் பெரு வேனே
மிரு வரம்பெருவா யென் மகனே
மார் வாஸ்தவமா
மிரு மகனேநீ ஜயமடைய வாழ்த்தினேனே
மார் சென்று வரவா பிதா
சென்று வரவா ஜனனீ
மிரு - மரு சென்று வருவாய் கல்யாண்
மார்க் வந்தனமே
மிரு - மரு மைந்தா நீ வாழி வாழி.

(மார்க்கண்டேயர் பிரிந்துபோதல்.)

மார்க்கண்டேயர் - தரு, (ஸ்ரீரகுகுல)

ஓம் பசுபதி உம்பர் க்ருபாநிதி
ஒருருவாய் ஒளிர் பாதம் கதி
சாம்ப சிவமே சைதன்ய வா ரிதி
சரணம் புரிந்தேன் தற்காருமித் ததி (ஓம்)

பரமேஸ்வரி ஸ்ரீ பைரவி கருணா
பதித பாவனா பால்ய ஸ்ரீ சரணா
திரிபுர ஸம்மாரா திருவே வி தாணா
தீன னாராயண சாமி யா பரணா (ஓம்)

வே. நாராயணசாமி பிள்ளை,
தமிழ் நாடகத் தலைமை யாசிரியர்.

மார்க்கண்டேயர் டிராமா,
முதற்பாகம்
சம்பூரணம்.

---

# புஸ்தக விளம்பரம்

இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள்:—

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன் | | 5 | 0 | 0 |
| ஷை திக்கு 2-வால்யம் | ஷை | 7 | 0 | 0 |
| ஷை கிளேஸ் | ஷை | 10 | 0 | 0 |
| இராமர் அஸ்வமேதயாகம் | ஷை | 2 | 0 | 0 |
| ஆதிபர்வம் | ஷை | 2 | 0 | 0 |
| விராடபர்வம் | ஷை | 1 | 0 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை திக்கு | ஷை | 2 | 0 | 0 |
| ஷை தின் | ஷை | 1 | 4 | 0 |
| தேசிங்குராஜன் கதை | ஷை | 0 | 6 | 0 |
| நளச்சக்கிரவர்த்தி கதை | ஷை | 0 | 8 | 0 |
| மதனகாமராஜன் கதை | ஷை | 1 | 0 | 0 |
| அல்லியரசாணிமாலை | ஷை | 0 | 12 | 0 |
| அபிமன்னன் சுந்தரிமாலை | ஷை | 0 | 12 | 0 |
| கிருஷ்ணன் தூது | ஷை | 0 | 8 | 0 |
| மதுரைவீரன் கதை | ஷை | 0 | 6 | 0 |
| ஏணியேற்றம் | ஷை | 0 | 4 | 0 |
| தருமர் அஸ்வமேதயாகம் | ஷை | 0 | 12 | 0 |
| கோவிலன் கதை | ஷை | 0 | 8 | 0 |
| சித்திராபுத்திரன் கதை | ஷை | 0 | 8 | 0 |
| துரோபதை குறம் | ஷை | 0 | 6 | 0 |
| பஞ்சபாண்டவர்வனவாசம் | ஷை | 1 | 0 | 0 |
| கருடபுராணவசனம் | ஷை | 0 | 8 | 0 |
| மயிலிராவணன் கதை | ஷை | 0 | 8 | 0 |
| அருணகிரியந்தாதி | | 0 | 4 | 0 |
| கதிரேசன் ஆனந்தக்களிப்பு | | 0 | 6 | 0 |
| பூலோக இன்பதுன்பம் | | 0 | 6 | 0 |
| அறுபத்துநான்கு படங்களடங்கிய தேவீபராக்கிரமம் | | 1 | 8 | 0 |
| பதினெண்சித்தர் ஞானக்கோர்வை | | 1 | 4 | 0 |

**மாம்பலம்–முனுசாமி நாயுடு,**

26, பெருமாள்கோவில் தோட்டத் தெருவ

சௌகார்பேட்டை, சென்